Registered as aNewspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (21-5-66) இதழ் 103

பராபவ வைகாசி 8 முஹர்ரம் 29 சனிக்கிழமை

பீடிகளில் சிறந்தது!

பீடி உலகில் சிறந்து விளங்குவது முல்லா பீடிகளே

தயாரிப்பாளரும் விநியோகஸ்தர்களும்:

முல்லா பீடி கம்பனி

கே.கே.எஸ். ரோட் - யாழ்ப்பாணம.

## நாராயணகுரு முத்திரை

புதுடில்லி, மே 20

கேரளத்தின் பிரபல சமூக சீர்திருத்த வாதியான நாராயண குருவின் நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக அடுத்த ஆண்டு விசேஷ தபால் முத்திரை வெளியிட இந்திய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. (பி. டி. ஐ.)

4 வாரம்

# கடூழிய சிறைவாசம்

## கொள்ளைலாபம் அடிப்போருக்கு குறைந்தபட்ச தண்டனை

### பார்லிமெண்டில் மசோதா விவாதம்

கொழும்பு. வெள்ளி

கட்டுப்பாட்டு விலையை மீறி பொருட்களை விற்பனை செய்வதின் மூலம் கொள்ளை லாபம் அடித்து முதற்தடவையாகக் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்படுகின்றவர்களுக்குக் குறைந்தபட்சம் நான்கு வார கடூழிய சிறைத்தண்டனை, கூடிய பட்சம் ஆறு மாதம் சிறையும் ரு. 7,500 அபராதமும் விதிப்பதற்கான புதிய மசோதா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது.

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான மேற்படி மசோதாவை உணவு வர்த்தக மந்திரி திரு. எம். டி. பண்டா சபையில் சமர்ப்பித்தபோது சபையின் இரு பகுதியினரும் ஏற்றுக்கொண்டனர்.

கட்டுப்பாட்டு விலையை மீறி பொருள்களை விற்பனை செய்து கொள்ளை லாபம் அடிப்பவர்கள் இரண்டாவது தடவையாகவும் அதற்குப் பிறகும் குற்றவாளியாகக் காணப்பட்டால் குறைந்தபட்சம் மூன்று மாதச் சிறையும் கூடியபட்சம் 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிப்பதற்குத் தற்போது மசோதாவில் வகைசெய்யப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தைப் பற்றி விவசாய மந்திரி விளக்கிப் பேசுகையில், சில சமயங்களில் இந்தவிதக் குற்றம் புரிகிறவர்களுக்கு நீதிமன்றம் கலையும்வரை சிறைத் தண்டனையும் குறைந்த அபராதமும் விதிக்கப்படுகின்றன நாடுபூராகவும் குறிப்பாக கொழும்புநகரில் கொள்ளை லாபம் அடிப்பது பெருமளவில் நடைபெற்றுவருகின்றபடியால் சட்டத்தில் திருத்தம செய்து தண்டனைகளை கூட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்று கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் மக்களை ஏமாற்றி கொள்ளை லாபம் அடிப்பவர்களைத் தண்டிக்கவேண்டுமென்று அரசாங்கம் உறுதிகொண்டிருக்கின்றது. கட்டுப்பாட்டு விலையை மீறுபவர்களுக்குச் சிறைத்தண்டனை தகுந்த பரிகாரமாக இருக்குமென்று குறிப்பிட்டார்.

### பிரதமர் பேச்சு

விலைக்கட்டுப்பாட்டு சட்டங்களை மீறி கொள்ளை லாபம் அடிப்பது குறிப்பாக கௌரவப் பிரஜாவுரிமை பெற்றவர்களாலேயே செய்யப்பட்டுவருகின்றது, இந்த நபர்கள் ஐக்கியதேசியக் கட்சியினல் கௌரவப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டவர்கள் அல்ல. கடந்த 9 ஆண்டுகளில் கௌரவப் பிரஜாவுரிமை பெற்றவர்கள்தான் இவர்களில் அனேகர். என்னைப் பொறுத்தவரை என் வாழ்க்கையில் பிரதமராகவிருக்கும் காலத்தில் ஒருபோதும் எவருக்கும் கௌரவப்பிரஜாவுரிமை வழங்கப்போவதில்லை.

இவ்வாறு பிரதமந்திரி திரு, டட்லி சேனநாயகா விலைக்கட்டுப்பாட்டு சட்டத் திருத்த மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

## பிரஜாவுரிமையை ரத்து செய்ய கோருவர்

### யு. என் பி. செயற்குழு விவாதிக்கும்

கொழும்பு, வெள்ளி

தற்போதைய அரசியல் சூழ்நிலைபற்றி பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகா இம்மாதம் 24-ம் திகதி ஐக்கியதேசியக்கட்சியின் செயற்குழு கூட்டத்தில் விளக்கம் கொடுப்பார். வெளிநாட்டிலிருந்த பிரதமர் நாடு திரும்பியபிறகு செயற்குழுக் கூட்டத்தில் பேசுவது இதுவே முதற் தடவை.

வியாபாரமோசடிகளில் ஈடுபடும் பதிவுப் பிரஜைகளின் பிரஜாஉரிமையை ரத்துச்செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று செயற்குழு கூட்டத்தில் விவாதிக்கப்படவிருப்பது முக்கிய நிகழ்ச்சியாக இருக்கும் என்று கருதப்படுகின்றது. வியாபார மோசடிகளில் ஈடுபடும் பதிவுப் பிரஜைகளுக்கு வியாபாரச் சலுகைகள் ரத்துச்செய்யப்படுவது மட்டுமன்றி அவர்களின் பிரஜாவுரிமையும் ரத்துச்செய்யப்பட வேண்டுமென்று சமீபகாலமாக அரசாங்கக்கட்சி பின்வரிசை எம், பிக்கள் மத்தியில் ஒரு கருத்து தீவிரமாகிவந்துள்ளது.

## உங்களுக்கு அதிர்ஷ்டம் உண்டா?

பம்பலப்பிட்டி, வெள்ளி

தேசிய லொத்தர் சபையின் 90-வது இலக்க சுவீப் இழுப்பில் முதல் மூன்று பரிசுகளையும் பெற்ற டிக்கட் விபரம் வருமாறு:

1-ம் பரிசு
01 G 0946 - ரூ 31,700

2-ம் பரிசு
11 T 0673 - ரூ. 12,680

3-ம் பரிசு
05 G 0222 - ரூ. 3,170

தலா 158 ரூபா 50 சதம் பெறும் 100 டிக்கட் விபரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| 03 D 0803 | 04 H 0940 |
| 13 W 0227 | 03 B 0114 |
| 03 R 0152 | 0[illegible] B 0170 |
| 05 F 0305 | 03 H 0607 |

(5-ம் பக்கம் பார்க்க)

நகைகளுக்கு
யப்பான் ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518
தந்தி: 'யப்பான்'

## நேருவின் 2-ம் சிரார்த்தம்

புதுடில்லி, மே 20

பண்டித ஜவஹர்லால் நேருவின் 2-வது சிரார்த்த தினம் இன்று முதல் ஒரு வாரத்துக்கு அனுஷ்டிக்கப்படுகிறது. இதற்கான விசேஷ நிதிசேர்க்க ராஜ்ய முதல் மந்திரிகள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள்.

தொழிலதிபர்கள் ரூபா 5 கோடி சேர்க்க கமிட்டி ஒன்றை நியமித்திருக்கிறார்கள்.

அரசாங்க பார்லிமெண்டரிகுழு கூட்டம்

## சகல பாடசாலைகளிலும் சிங்களமொழி போதனை

### கல்வி மந்திரியிடம் பிரேரணை தாக்கல்

கொழும்பு, சனி

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் சிங்களமொழி போதிக்கப்படுவதைக் கோரும் பிரேரணையொன்று கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையின் ஆலோசனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இன்று அலரிமாளிகையில் நடைபெற்ற அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக்கூட்டத்தில் இப்பிரேரணை கொண்டுவரப்பட்டது. ரத்கமை எம். பி. திரு. டி. ஈ. திலகரத்ன இப்பிரேரணையைத் தாக்கல்செய்திருந்தார்.

இப்பிரேரணைமீது விவாதம் நடைபெற்றது. இதன் பின்னர் இப்பிரேரணையின் முக்கியத்துவம் குறித்து அவரது ஆலோசனைக்கு விடப்பட்டது. இதுசம்பந்தமாக கல்வி மந்திரி அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

### கூட்டுறவு இயக்க விசாரணை கமிஷன்

வர்த்தக மந்திரி டாக்டர் பீரிஸ், பார்லிமெண்டரிக் குழுக்கூட்டத்தில் பேசுகையில். நாட்டிலுள்ள கூட்டுறவு இயக்கங்கள் குறித்து விசாரணைகள் நடத்துவதற்கு விரைவில் விசாரணை கமிஷனென்றை நியமிக்கத் தாம் நடவடிக்கை எடுக்கப்போவதாகக் கூறினர்.

இந்த நடவடிக்கையைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா ஆதரித்துபேசுகையில்சோஷலிஸபொருளாதாரத்தின் முதுகெலும்பு கூட்டுறவு இயக்கம் என்று கூறினர்.

கூட்டுறவு இயக்கத்தில் உள்ள மோசடிகள் நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து பல எம். பி.க்கள் கூட்டத்தில் குற்றம் சுமத்தியிருந்தனர்.

## 'தமிழ் சிங்கள பிளவுக்கு வழிகோலும்'

—செனட்டர் நடராஜா

கொழும்பு, வெள்ளி

நாட்டிலுள்ள எல்லா பாடசாலைகளிலும் சிங்களம் கட்டாய பாடமாக்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சியினரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரேரணையொன்று செனட்சபையில் இன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அதனை ஆட்சேபித்து செனட்டர் மன்சூர், செனட்டர் நடராஜா ஆகியவர்கள் பேசினர்கள்.

செனட்டர் நடராஜா பேசுகையில், சிங்களத்தை கட்டாய பாடமாக்கவேண்டுமென்று கூறப்படுவது தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் மீண்டும் பிளவை ஏற்படுத்துவதற்காகச் செய்யப்படும் நடவடிக்கையாகும். இப்போது சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் ஐக்கியமும்சௌஜன்யமும்நிலவுகின்றது. சிங்களம் கட்டாய பாடமாக்கப்படுமானல் ஏற்கனவே ஆங்கிலம் இரண்டாவது கட்டாயபாடமாகவிருப்பதால் சிங்களத்தை மூன்ருவது கட்டாய பாடமாகத்தமிழ்சிறுவர்கள் படிக்கவேண்டியிருக்கும் என்று கூறினர்.

## தமிழ்ப் பேரறிஞர் பண்டிதர் அருளம்பலவனர் மறைவு

யாழ்ப்பாணம், சனி

தமிழ்ப் பேரறிஞர், பண்டிதர் சு. அருளம்பலவனர் நேற்றுக் காலமானர் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து என்னும் சங்கநூல்கள் மூன்றினையும் ஆராய்ந்து அரிய விளக்கவுரையுடன் பதிப்பித்து வெளியிட்டவரும் திருவாசகத்திற்கு உரை எழுதிவந்தவருமான பண்டிதர் அருளம்பலவனரின் திடீர் மறைவு தமிழுலகிற்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டமென தமிழறிஞர்கள் வருந்துகின்றனர். பண்டிதரின் பதிற்றுப்பத்து ஆராய்ச்சி உரை இலங்கை சாகித்தியமண்டலத்தின் பரிசினையும் பெற்றது.

காரைநகர் சம்பந்தர் கண்டி என்னுமிடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பண்டிதர் அருளம்பலவனரவர்கள் காலியிலும் பின்னர் காரைநகர் மெய்கண்டான்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உலகத்திலே துயரும் துக்கமும் அதிகமுள்ளன. காரணம் மக்கள் தங்களது தெய்வீகத் தாயையும் தந்தையையும் மறந்ததினுல்தான் அவரை சதா நினைப்பதால், நமது மனம் அமைதியாகவும் ஆனந்தமாகவுமிருக்கும். அப்போது எல்லோருடனும் அன்புடனும் சாதி, சமய வேற்றுமைகளில்லாமலும் பழகி வாழ முடியும்.

— சுவாமி ராமதாஸ்

# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna: Phone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 8 உ (21-5-66)

## பொலிஸும் பொதுமக்களும்

பொதுமக்களின் ஒத்துழைப்பைப்பெற்ருல்தான் பொலிசார் தங்கள் கடமைகளைத் திறமையாகச் செய்ய முடியுமென்று பொலிஸ் அதிபர் ஜான் அட்டிகலே சரியாக உணர்ந்து பொலிஸ்படையில் தக்க சீர்திருத்தங்களைச் செய்யத் திட்டம் தயாரித்து அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது வரவேற்கத்தக்கது.

மற்றப்பகுதிகளில் எப்படியாயினும் வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பொலிஸார் பெற்றுள்ளனரென்று கூறுவதற்கில்லை. இதற்குப் பல காரணங்களுண்டு. சென்ற அரசாங்க ஆட்சியிலே நீண்டகாலம் அவசரகால பிரகடனம் செய்து பொலிஸும் இராணுவமும் விசேஷ அதிகாரம் பெற்று பொதுமக்களை இங்கு பலபல இம்சைகளுக்கு உள்ளாக்கியதை விளக்கத் தேவையில்லை. அதுமுதல் பொலிஸார் தாங்கள் பொதுமக்களின் ஊழியரென்பதை மறந்து பொதுமக்களை அடக்கியாள அனுப்பப்பட்டுள்ளதாகத் தவருன கருத்துக் கொண்டு காரியங்கள் செய்தனர். தேசிய அரசாங்க ஆட்சிவந்த பிறகு, நிலைமை சற்றே அபிவிருத்தி அடைந்துள்ளதெனினும், பொதுமக்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் பொலிஸார் பெற்றுவிட்டதாகக் கூற முடியாது.

இந்த நிலைமை நீடிப்பதற்கு முக்கிய காரணம், இங்குள்ள பொலிஸ் படையினரில் பெரும்பாலோருக்கும் தமிழ் தெரியாததால், பொதுமக்கள் அவர்களிடம் மனம் விட்டுப் பேசத் தயங்குகின்றனர். பொலிஸைத் தங்களது நண்பர்கள் என்று மதிப்பதற்குப் பதில் தங்களை அடக்கியாள்வதற்காக இங்கு அனுப்பி வைக்கப்பட்டவர்கள் என்ற கருத்தே சரியாகவோ, தவருகவோ மக்களிடை நிலவுகின்றது. தமிழ்பேசும் மக்களே அதிகமாக வாழும் பகுதியில் கடமைபார்க்கும் பொலிஸார், மக்களின் மொழியை நன்கு பேசத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களைப் பிடிப்பதென்று கூறி வடமாகாணத்திலே பொலிஸுக்கும் இராணுவத்துக்கும் சில விசேஷ அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

இங்கு பல்லாண்டுகளாகக் கண்யமாகக் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தவர்களையும் நள்ளிரவில் பிடித்து பொலிஸ் ஸ்டேஷனில் பலபல இம்சைகள் செய்யப்பட்டன. உயிர்ச்சேதமும் ஏற்பட்டது. சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்க வேண்டியதுதான். ஆனால் அதற்காக பலாத்காரத்தை அளவுக்கு மிஞ்சிப் பிரயோகிப்பது எவ்விதத்தும் தகாது. லஞ்ச ஊழல்களும் பொலிஸ்படையில் புகுந்துள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இது போன்ற பல காரணங்களால், வடமாகாணத்தில் பொலிஸார் பொதுமக்களின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் பெற முடியாது போகின்றது.

பொலிஸ் படையிலுள்ள ஊழல்களை நீக்கி, பொதுமக்களின் ஒத்துழைப்பைப்பெற முனைந்துள்ள பொலிஸ் அதிபர், வடக்கு, கிழக்கு மாகாண விசேஷ நிலையைக் கவனித்து, இங்கு பொதுமக்களின் மொழியை நன்கு அறிந்தவர்களையே அனுப்புவதுடன், பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறத்தக்க நடவடிக்கைகளை துணிச்சலுடன் எடுப்பின், இங்குள்ள பொதுமக்களின் நன்றிக்கு அவர் பாத்திரமாவதுடன், அவர்களது ஒத்துழைப்பையும் பெற முடிவதாக இருக்கும்.

## கலைஞர்கள் வருகை

கலைஞர்களும், அறிஞர்களும இந்தியாவுக்கும் இலங்கைக்கும் தாராளமாக யாத்திரைசெய்ய வசதிசெய்ய வேண்டுமென்று, கொழும்பிலுள்ள இலங்கை—இந்திய நட்புறவுச் சங்கம் செய்துள்ள தீர்மானம் பலவிதங்களிலும் வரவேற்கத்தக்கது.

சமீபகாலத்தில் சில சினிமாக் கலைஞர்கள் தமிழகத்தில் இருந்து இங்கு வந்து பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு இன்பமூட்டினர். தமிழர் மட்டுமன்றி சிங்களவர்களும் லட்சக்கணக்கில் கூடி அமோக வரவேற்பு அளித்தனர். இங்கு பல நல்ல காரியங்களுக்கு அவர்களது விஜயம் உதவியது. ஆனல் அங்கிருந்துவரும் எல்லாக் கலைஞர்களையும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்று சொல்லி, சிலர் துவேஷப் பிரசாரம் செய்கின்றனர் சிவாஜிகணேசனும் கூட தி.மு. காவாம்! நல்லவேளையாக தேசிய அரசாங்கம் இந்தப் பிரசாரங்களுக்கு அஞ்சாமல், கலைஞர்களை வரவேற்று ஒத்துழைப்பது பாராட்டத்தக்கது.

ஆனலும் இரு தேசங்களுக்கிடையே கலைஞர்களும் அறிஞர்களும் பரஸ்பரம் யாத்திரைசெய்ய இன்னும் பல முட்டுக்கட்டைகள் உள்ளன. விஸாவழங்குவதில் இலங்கை அரசாங்கம் முன்னைவிட அதிக கண்டிப்புக் காட்டுவதாகத் தெரிகிறது. இதனல் இருதேச பொதுமக்களும் அதிக சங்கடப்படுகின்றனர். யாத்திரை சுலபமானல் கள்ளத்தனங்களும் குறையக்கூடும்.

இலங்கை—இந்தியா நட்புறவுச் சங்கத்தில் பல பொறுப்புள்ள சிங்களவரும் இருப்பதால், அவர்கள் இதில் போதிய ஊக்கமெடுத்து யாத்திரையை சுலபமாக்கினல், இருதேச பொதுமக்களின் நன்றிக்குப் பாத்திரமாவதுடன், இருதேச நட்புறவையும் பலப்படுத்திய பெருமையைச் செய்தவர்களுமாவர்.



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## மலேஸிய மகாநாட்டு சாதனைகள்

'ஈழநாடு' சென்றவாரப் பதிப்பில் வித்துவான் முத்துக்குமாரன் அவர்களின் உலகத் தமிழாராய்ச்சி மகாநாடுபற்றிய கட்டுரையை வாசித்தேன் அம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் தாங்கள் தொடர்ந்து வெளியிட்டு வருவதும் தெரிந்ததே. இருப்பினும் அம்மாநாட்டில் எடுக்கப்பட்ட தமிழ்மொழியின் வளர்ச்சிக்கான ஆக்கமுறைச் செயற்திட்டங்கள், தீர்மானங்கள் பற்றி என் போன்ற பலர் அறிய ஆவலாயுள்ளனர். குறிப்பாக தமிழ் மொழியில் புதிய கலைகளைக் கொணர்வதற்கான மொழி பெயர்ப்பு வேலைகள், கலைச்சொல்லாக்கல், எழுத்துப் பெயர்ப்பு செய்தல் என்பனபற்றி கற்றறிந்த பலநாட்டு தமிழறிஞர்கள் மொழிநூலறிஞர்கள் தெரிவித்த ஆணித்தரமான கருத்துக்கள் என்னவென்பது தெளிவாக்கப்பட வேண்டும். நம் நாட்டிலும் இவ்விடயங்கள் சம்பந்தமாக கருத்துவேறுபாடுகளும் குழப்பநிலையும் இருப்பதாகத் தெரிகிறது. மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தீர்மானங்கள் பற்றித் தெரிந்தால் வேறுபாடுகளும் குழப்பமும் நீங்கித் தெளிவுண்டாக வழி பிறக்கலாம். ஆதலினல் மாநாட்டிற்குச்சென்றுவந்த அறிஞர் ஒருவரோ பலரோ குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாக விரிவான கட்டுரைகளை வெளியிட்டுதவுமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

சு. மகாலிங்கம்,
அனலைதீவுதெற்கு.

○

### கற்பூரதீபம்

இந்துக் கோவில்களில் இப்போ திருவிழாக்கால மாதலின் உள்ளூரில் தயாரிக்கப்பெற்ற கற்பூரத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறதென்றும் அதனல் கற்பூர விலை ஏறிவிட்டது என்றும் கேள்விப்படுகின்ருேம். கற்பூரத்துக்குத் தட்டுப்பாடில்லைஎன்றும் ஆனல் பெரிய வியாபாரிகள் சிலர் கற்பூரத்தைப் பதுக்கி வைத்து அதிகலாபம் பெற முயற்சிப்பதனுலேயே கற்பூரத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென்றும் சிலர்சொல்லுகிருர்கள். ஆதலின் கற்பூரம் மலிவாகக் கிடைக்க வேண்டுமெனின் கற்பூர உற்பத்தியாளர் தொகை அதிகரிக்க வேண்டும்.

இதுபோக இன்னுமொரு விஷயம் ஆராய்தற்குரியது. கற்பூரம் கோவில்களிலே அத்தியாவசியமாக வேண்டப்படுமா? கற்பூரம் இல்லாவிட்டால் சைவசமய வழிபாடு பாதிக்கப்படுமா? அல்லது சமயச் சடங்குகளில் ஏதாவது குறை ஏற்படுமா? கற்பூரம் கிடைக்காவிடில் அதற்குப் பதிலாக வேறு என்ன பொருளை உபயோகிக்கலாம்? இவைபோன்ற வினக்களுக்கு அறிவுடையோர் ஆலோசனைகள் கூறவேண்டும். இந்துக்களின் பொருளாதார நிலையைத் தாழ்த்துவதற்காக கற்பூரம் சர்க்கரை போன்ற பொருள்களின் விலைகளை ஏற்றியும் தட்டுப்பாடுகளைஉண்டாக்கியும்வருகிருர்கள்என்றுசிலர் சந்தேகிக்கிருர்கள். அங்ஙனமாயின் இவைகளை முற்றிலும் நீக்கிவிடவேண்டும். அல்லாவிடின் இவைகளை உற்பத்தி செய்யவேண்டிய மூலப்பொருள்களை இங்கே உண்டாக்க முனைதல்வேண்டும்.

நா. ப. பாலச்சந்திரன்

○

### ஓய்வுபெற்ற ஊழியர்

'ஈழநாடு' வியாழக்கிழமை பதிப்பில், 'தன்னிறைவு பெற்ற தமிழ்ப் பல்கலைக் கழகம்' என்ற தலைப்பின்கீழ் முதல் பக்கத்தில் வெளிவந்த செய்தியில், 'ஓய்வுபெற்ற ஊழியர்' பற்றி டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தமிழரசுக்கட்சியின் பொதுக் குழுக்கூட்டத்தில் குறிப்பிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதுபற்றி எம நிலையையும் சிறிது தெளிவுபடுத்தவிரும்புகிருேம்.

டாக்டர் நாகநாதனும் அவரது நண்பர்களும், ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர் விஷயமாக தம்மால் ஒன்றும் செய்யமுடியாதெனக் கைகழுவிவிட்டுவிட்டனர். சில மாதங்களின்முன் யாழ்ப்பாணம் வாடிவீட்டில் எமது கழக தூதுக்குழு வொன்று டாக்டர் நாகநாதனைப் பேட்டிகண்டது. அப்பொழுது, எமது விஷயத்தில் தாம் ஒன்றும் செய்யமுடியாதென்றும் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்து பார்க்குமாறும் கூறினர். "நீங்கள் தலைக்குப் பத்து ரூபாய் வீதம் சேருங்கள். தோற்ருல் பத்துரூபாய் வென்ருல் கூடுதலாகவரும். ஆகையால் ஓர் அதிர்ஷ்டச் சீட்டை இழுத்துப் பாருங்கள்" என்று கூறினர்.

இதன்பின் எமது கழகம் நிதியமைச்சருடன் தொடர்புகொண்டு அவரைச் சென்ற மாதம் 25-ந் திகதி எமது தூதுக்குழு பேட்டியும் கண்டது. நாம் சேவையிலிருந்தபொழுது தரப்படாத சம்பள உயர்வுப் பணத்தொகையைத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்தார். இதர விஷயங்களிலும் எமது கழகம் நடவடிக்கை எடுத்துவருகிறது. இந்நிலையில் டாக்டர் நாகநாதன் எமது விஷயம் பற்றி எப்பொழுது என்ன செய்தார் என்பதை நாம் அறியவிரும்புகிருேம்.

மூ. மகாலிங்கம்,
கௌரவ காரியதரிசி,
சிங்களச் சட்டத்தினல்,
வேலைஇழந்தோர் கழகம்.
யாழ்ப்பாணம்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

புலனைந்தும் போக்கிஞன் காண் புரிசடைமேற் பாய்கங்கை பூரித்தான்காண்,
நல்லவிடை மேல்கொண்டு நாகம்பூண்டு நளிர்சிரமொன் றேந்தியோர் நாணுயற்ற,
கல்லாடை மேற்கொண்ட காபாலிகாண் காளத்தியானவனென் கண்ணுளானே.

—அப்பர் சுவாமிகள்

# ஐயாறன் எழுதுவது

பேராதனையிலிருந்து சில இந்து மாணவர்கள் வந்து, அங்கு கோவில் கட்டுவதற்காகப் பணம் திரட்ட, யாழ்ப்பாணத்தில் ஒரு சினிமாப்படம் காட்டப்போவதாயும், அதற்கு இங்குள்ள இந்துசமூகத்தார் உதவ வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

சர்வகலாசாலைகளில் நாத்திகம் பரவிவரும் இக்காலத்தில், நம் பேராதனை மாணவர்கள், இந்துக்கோவில் கட்ட இவ்வளவு ஊக்கம் எடுத்து முன்வந்திருப்பதைக்காண மிக மகிழ்ச்சியாக இருந்தது. ஏற்கனவே இதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தைச் சிரமதானம் மூலம் மாணவர்கள் திருத்தி துப்புரவாக்கி யுள்ளனராம். யாழ்ப்பாணம் ராஜாதியேட்டரில் 24ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 2-30 மணிக்கு மெட்னி காட்சியாக 'பொம்மை' என்ற படம் திருப்பணி நிதிக்காகக் காட்டப்படுவதாவும், "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்றும் இலங்கைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தார் ஒரு துண்டுப்பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்து மாணவர்களின் இந்த நல்ல முயற்சிக்கு இங்குள்ள இந்துசமூகத்தாரும் மற்றவர்களிலும்கூட நல்லாதரவு அளித்து, இந்தத் திருப்பணி சீக்கிரத்தில் வெற்றிகரமாக நிறைவேற ஆவன செய்வார்களென்றே நம்புகிறேன். இது நல்லதோர் புண்ணியமாவதுடன் இந்துசமயத்தின் மதிப்பை அந்த வித்தியாபீடத்தில் காப்பாற்றவும், நம் மாணவர்கள் நல்வாழ்வு வாழவும் உதவியதுமாகும்.

ஃ ஃ ஃ

காலையிலே அன்பரொருவர் பதறிக்கொண்டு வந்தார். யாழ்ப்பாணம் முற்றவெளியிலே மாட்டுச்சவாரி பயிற்சி நடப்பதாகவும், சின்னக்கன்றுகளை இரக்கமின்றி அடிப்பதுடன், நீண்ட கூரிய கம்பிகளால் குத்துவதாகவும், இரத்தமும் பீறிட்டு வருவதாகவும் இந்தச் சித்திரவதையைத் தடுக்கமுடியாதா என்றும் கேட்டார்.

வாயில்லாப் பிராணிகளை இம்சை செய்யக்கூடாது என்று சட்டமுண்டு. ஆனல் ஏட்டளவில்தான். இதற்காக ஒரு சங்கம் உண்டென்றலும், அச்சங்கமும் தூங்குவதாயும், இதைப்பற்றி இங்கு பொலிஸாரும் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லையென்றும் அறியவந்தேன்.

மாட்டுச்சவாரி நடத்தலாம். ஆனல் வாயில்லாப் பிராணிகளை இப்படி அடித்து, கம்பியால் குத்தி சித்திரவதைசெய்வது உண்மையாயின் அது பெரும் பாவம். அன்பே சிவம் என்று கூறும் சைவமக்கள் அதிகமாக வாழும் யாழ்ப்பாணத்திலே, சிவபெருமானின் ஊர்தியெனப்படும் காளைகளை இப்படி இம்சைக்கு உள்ளாக்குவது அச்சமூகத்தின் புகழுக்கு அழகாகுமா! சைவசமூகத்தினரும் பொலிஸ்படையினரும் சற்றே கண்விழித்துத் தங்கள் கடமையைச் செய்வார்களா? யாழ்ப்பாணத்தின் நற்பெயரைக் காப்பார்களா?

ஃ ஃ ஃ

எல்லாம்முன் தோன்ருமே தோன்றினன் காண் ஏகம்பம் மேயான்காண் இமையோரேத்தப், பொல்லாப்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாங்காக்கில் பேச்சு நடத்தலாமே!

## மலேஸியாவுக்கு இந்தோனேஷிய வெளிமந்திரி சிபார்சு

### அமைதிப் பேச்சில் இருசாராரும் காட்டும் ஆர்வம்

ஜாகர்ந்தா, மே. 20

**இந்தோனேஷியா—மலேஸியா ஆகிய இருநாடுகளுக்குமிடையேயான கெடுபிடிகளை முடிவுக்குக்கொண்டுவர இருநாட்டுத் தலைவர்களும் விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்.**

இருசாராரும் பேச்சுநடத்துவதற்கான காலமும், இடமும்மட்டுமே தீர்மானிக்கப்படவேண்டியிருக்கிறதென இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக்நேற்றுக்கூறினார்.

பாங்காக் நகரம் பேச்சு நடத்துவதற்கு மிகவும் பொருத்தமானஇடம் எனத்தாம் கருதுவதாயும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் மலேஸியப் பிரதமர் துங்கு ரஹ்மான் விடுத்துள்ள அறிக்கையொன்றில், மணிலா உடன்படிக்கையான "மபிலிண்டோ" கைவிடப்படவேண்டுமென்றும், புதிய தென்கிழக்காசிய சங்கம் ஒன்றை அமைப்பதுகுறித்து ஆலோசிக்கப்பட வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

துணைப் பிரதமர் துன் ரஸாக் இதுபற்றிக் கூறுகையில், தற்போதைய போக்கு நீடிக்குமானால், பிரச்னைகளைத் தீர்ப்பது சாத்தியமாகும் எனக் குறிப்பிட்டார்.

பேச்சுநடத்த எச்சமயத்திலும் தாம்செல்லத் தயார் எனக்கூறிய இந்தோனேஷிய வெளிமந்திரி, மலேஸியாவும் இந்தோனேஷியாவும் இப்பகுதியில் பந்தோபஸ்துக்கு உத்தரவாதமளித்தால், பிரிட்டிஷ் துருப்புகள் மலேஸியாவிலிருந்து விலக முடியுமென்றும் கூறினார்.

## ஹாம்பர்க்கில்

### இந்தோ-பாக். ஹாக்கி

ஹாம்பர்க், மே 20

இங்கு நடைபெற்ற சர்வ்தேச ஹாக்கி போட்டித் தொடரில், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையேயான போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா 1கோல் போட்டதால் பெரும் வெற்றிபெறவில்லை,

இத்தொடரில் இதுவரை நடைபெற்ற போட்டிகளிலேயே இவ்வளவு நேர்த்தியான விளையாட்டு இடம் பெறவில்லை. என அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் கோஷ்டியின் கட்டுக்கோப்பும், இந்தியக் கோஷ்டியின் மட்டைகளில் பந்து உருண்டு செல்லும் அழகும் 5,000 ரசிகர்களை ஆகர்ஷித்தன. முதல் கோலை பாகிஸ்தான் போட்டது.

மற்றோர் போட்டியில் கென்யா போலந்தை 2—1 கோல்களினால் தோற்கடித்தது.

மேற்கு ஜெர்மனி, ஹாலந்தை 1—0 கோலினால் வென்றது.

## வடவியட்னும் படைகள் எல்லைக்கோட்டில் தாக்கின

### அமெரிக்க குண்டுவீச்சைத் தொடர்ந்து பின்வாங்கல்

சைகோன், மே 20

**வடவியட்னுமின் முறையான இரு படைப்பிரிவுகள் வியட்னுமை இரண்டாகப் பிரிக்கும் எல்லைக்கோட்டுக்குள் தெற்கே நுழைந்து தாக்குதல் தொடுத்ததாயும் அமெரிக்க விமானங்கள் குண்டுவீச்சினால் இந்த இரு தளங்களை தீமயமாக்கியதைத் தொடர்ந்து வடவியட்னுமியர் பின்வாங்கினர் என்றும் அறிவிக்கப்பட்டது.**

இதற்கிடையில் தென்வியட்னுமிலுள்ள ஹூவே நகரில் அரசாங்க விமானம் ஒன்றை கிளர்ச்சித் துருப்புகள் சுட்டன.

டானுங்கில் இருபகுதித் துருப்புகளுக்குமிடையே ஏற்பட்ட சண்டையில் பொது மக்களில் இருவர் கொல்லப்பட்டு 10 பேர் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

அங்கு பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் வெகுவாக மீறப்பட்டது என்றும் அரசாங்க துருப்புகளுக்கு எதிராகச் சண்டையிடும் பொருட்டு மக்கள் வெளியே வந்தனர் என்றும் கூறப்பட்டது.

இதற்கிடையில் டானுங்கிலுள்ள கிளர்ச்சித் துருப்புகளுக்கு உதவும் பொருட்டு, அரசாங்க துருப்புகள் மீது விரைவில் தாக்குதல் தொடுக்குமாறு வியட்காங்கியரை அதன் வானொலி கேட்டுக்கொண்டது.

தென்வியட்னுமிலிருந்து அமெரிக்க துருப்புகள் வெளியேறி, வியட்காங்கின்தேசிய விடுதலை முன்னணியை அதன்பிரதிநிதியாக அமெரிக்கா அங்கீகரித்தால் மட்டுமே, சமாதானப்பேச்சுக்கு சீனு ஆரம்பநவடிக்கை எடுக்கும் என வெளிநாட்டு மந்திரி சென்யீ ஒரு பேட்டியில் கூறினார்.

அமெரிக்கா சீனுமீது தாக்குதல் தொடுக்க முனைந்தால் அதற்கு சீனுதயாராய் இருக்கிறதென்றும் அவர் கூறினார்.

### பாகிஸ்தான் ஆட்சேபம்

ராவல்பிண்டி, மே 20

காஷ்மீரில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைக்கு பாகிஸ்தான் தான் காரணம் என இந்தியா கூறிவருவதை மறுத்து பாகிஸ்தான் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது,

குறிப்பாக காஷ்மீர் முதல்வர் ஸாதிக்மீது வெடிகுண்டு வீச்சு முயற்சியில், பாகிஸ்தானுக்கு சம்பந்தம் இருப்பதாய்க் கூறப்படுவதை அது வன்மையாக எதிர்த்துள்ளது.

இந்த குண்டு வீச்சு காரணமாக பாராமுல்லாவில் 40 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் என அறிவிக்கப்பட்டது.

### மேனன் எதிர்ப்பு

பம்பாய், மே 20

பாரதம் அணுகுண்டு உற்பத்தி செய்யக்கூடாது என இங்கு ஒரு கூட்டத்தில் பேசிய வி.கே.கிருஷ்ண மேனன் கூறினார்.

### தாகூரின் ரஷ்ய பெயர்ப்புகள்

கல்கத்தா. மே 20

ரஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்ட 12 தாகூர் நூல் தொகுப்புக்களின் பிரதிகள் கல்கத்தா ரவிந்திரபார்த் பல்கலைக் கழகத் துணைத்தலைவரிடம் நேற்று வழங்கப்பட்டன.

### முத்தரப்பு மகாநாடு

பெல்கிரேட், மே 20

டிட்டோ, நாஸர், இந்திரா உச்சிமகாநாடு குறித்து ராஜீயரீதியில் ஆலோசனைகள் நடைபெற்று வருவதாக இங்கு அறிவிக்கப்பட்டது.

இந்திய உதவி வெளிமந்திரி திரு. தினேஷ்சிங், கயானு சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பும் வழியில் பெல்கிரேட்டிலும் கெய்ரோவிலும் இதுசம்பந்தமாகப் பேசுவார் என அறிடக்கப்படுகிறது. நேற்று டில்லியிலுள்ள யூகோ, ஐக்கிய அராபியக் குடியரசுத் தூதர்கள் திரு. தினேஷ்சிங், திரு. ஸி. எஸ். ஜா ஆகியோருடன் உச்சி மகாநாடு குறித்துப் பேசினர்.

### பாகிஸ்தான் அத்துமீறல்

கல்கத்தா, மே 20

கடந்த புதன்கிழமை காலை மேற்கு தினேஜ்பூருக்கருகே இந்தியப் பகுதியிலிருந்து ஒருவரைக் கடத்திச் சென்றது குறித்து மேற்கு வங்கம் கிழக்கு பாகிஸ்தானிடம் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

மற்றோரிடத்தில் 12-க்கதிகமான ஆயுதம் தரித்த பாகிஸ்தனியர் இந்தியப் பகுதிக்குள் பிரவேசித்து ரோந்து கோஷ்டி ஒன்றைச் சுட்டதாக அறிவிக்கப்பட்டது.

### உயர்மட்ட ஆலோசனை

புதுடில்லி, மே 20

மீஸோ நாகர் பிரச்னை பற்றி உயர்மட்ட ரீதியில் ஆலோசனை நடைபெற்றது.

பிரதமருக்கும் பகை நாகர்களுக்குமிடையே அடுத்த சந்திப்பு விரைவில் நடக்கும் என அறிவிக்கப்படுகிறது. சமீப ரயில் வெடிப்பு, பேச்சுக்களைப் பாதிக்காது என்று கருதப்படுகிறது.

## சூரிய கிரகணத்தை விஞ்ஞானிகள் ஆய்ந்தனர்

ஏதன்ஸ், மே 20

150 அமெரிக்க விஞ்ஞானிகளும், ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 70 விஞ்ஞானிகளும் இன்று நடைபெற்ற சூரிய கிரகணத்தை அவதானித்துஆராயுமுகமாக ஏதென்ஸில்கூடினர்.

இந்தியாவிலுள்ள குருக்ஷேத்திரத்தில் 5 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடி கிரகணத்தைக் கண்ணுற்றனர். பிற்பகல் 3-25 முதல் இரண்டரை மணி நேரம் கிரகணம் நீடித்தது.

## பாதுகாப்பு சபையில் ரொடீஷிய விவாதம்

நியூயோர்க், மே 20

**ரொடீஷியாபற்றி திரைமறைவு பேச்சின்மூலம் அங்கத்தினர்கள் ஏற்கத்தக்க ஒரு தீர்மானத்தைத் தயாரிக்கும் பொருட்டு, பாதுகாப்புசபைக் கூட்டம் இன்றிரவுவரை ஒத்திவைக்கப்பட்டது.**

சபைக்குமுன் இருக்கும் ஆபிரிக்க நாடுகளின் தீர்மானம் ஸ்மித் ஆட்சியைக் கவிழ்க்க பிரிட்டன் படைபலத்தை உபயோகிக்க வேண்டும் எனக் கோருகிறது.

நேற்றைய கூட்டத்தில் உகண்டா பிரதிநிதி பேசியபோது பிரிட்டனின் பாரபட்சமற்ற தன்மையில் ஆபிரிக்க நாடுகளுக்கு நம்பிக்கை இல்லையென்றும், படைகளை உபயோகிக்கப் போவதில்லை என ஸ்மித்திற்கு பிரிட்டன் எப்படி வாக்குறுதியளிக்க முடியும் என்றும் கேட்டார்.

ஜோர்டானிய பிரதிநிதி பேசியபோது ரொடீஷிய பிரசனை நாளுக்குநாள் சிக்கலாகி வருகிறது என்றார்.

அர்ஜண்டீனு பிரதிநிதி பேசியபோது தென்னுபிரிக்கா, போர்த்துக்கல் ஆகிய நாடுகள் ஸ்மித் ஆட்சிக்கு உதவுவதைத் தடுக்கவேண்டும் என்றார். ஆபிரிக்க நாடுகளின் உணர்ச்சியில் தாமும் பங்கு கொள்வதாயும், ஆனால் ரொடீஷியப் பிரச்னையில் ஐ. நா.வுக்கு வேலை இல்லை என்றும் அதுமுற்றும் பிரிட்டனின் சொந்தப் பிரச்னை என்றும் பிரெஞ்சுப் பிரதிநிதி கூறினார்.

கோமிண்டாங் பிரதிநிதி பேசுகையில் ஸ்மித் ஆட்சிக்கெதிராக பலாத்காரம் உபயோகிக்கப்பட வேண்டும் என்றார்.

இதேசமயம் ரொடீஷியா பற்றி லண்டன் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்றன. பேச்சின் விபரம்பற்றி எதுவும் வெளியிடப்படவில்லை.

## உலக அதிபார குத்துச்சண்டை

### கண் சிதைந்தாலும் சண்டையை நிறுத்த வேண்டாம்

லண்டன், மே 20

இங்குள்ள ஹைபரி ஸ்டேடியத்தில் நடைபெறவிருக்கும் கிளே - கூப்பர் குத்து சண்டையின் போது கூப்பருக்கு கண்ணில் காயச் சிதைவு ஏற்பட்டால், சண்டையை நிறுத்துவதா இல்லையா என்ற விஷயத்தை தீர்மானிப்பது தங்கள் விசேஷ பொறுப்பாய் இருக்கும் என எதிர்பார்ப்பதாக, கூப்பரின் சாரார் அறிவித்துள்ளார்கள்.

கூப்பருக்கு கண்ணைச் சுற்றிக் காயம் ஏற்பட்டாலும் சண்டையை நிறுத்த வேண்டாம் என மத்தியஸ்தர் ஜார்ஜ் ஸ்மித்துக்கு அறிவுறுத்தும்படி பிரிட்டிஷ் குத்துச்சண்டை கட்டுப்பாட்டு சபைக்கு கூப்பரின் மனேஜர் ஜிம் விக்ஸ் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஆனால் மத்தியஸ்தர்கள் கோதாவுக்கு போகுமுன் நாங்கள் எதுவும் அவருக்கு அறிவுறுத்துவது கிடையாது என குத்துச் சண்டை சபையின் காரியதரிசி கூறினார், மத்தியஸ்தர் ஜார்ஜ் ஸ்மித் மிகவும் சிறந்த வல்லுனராதலால் அபாயம் ஏற்படும் நிலையில் அதை நிறுத்தவோ, அல்லது தொடரவோ அவருக்குத் தெரியும் என்றும் அவர் கூறினார்.

(பி. டி. ஸி)

### இந்தோ - யு. எஸ கல்வி நிறுவனம்

புதுடில்லி, மே. 20

உத்தேச பாரத- அமெரிக்க கல்வி நிறுவனம் குறித்து பிரதமரும், கல்வி மந்திரி சக்ளாவும் பல்கலைக்கழக துணைவேந்தர்கள், கல்வி நிபுணர்கள் ஆகியோருடன் நேற்று பேச்சு நடத்தினர்.

பொதுவாக இந்த நிறுவனத்தைப் பலர் வரவேற்றனர். ஆனால் அதன் நோக்கம், குறிக்கோள் குறித்து வேறுபாடான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியன மட்டுமே முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும் எனச் சிலர் கருதினர்.

### புதிய காஸ் கண்டுபிடிப்பு

லண்டன். மே 20

பிரிட்டனில் பெருமளவு வாயு (காஸ்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது தோண்டும் வேலையில் ஈடுபட்டுள்ள கனேடிய கோஷ்டி இதைக்கண்டு பிடித்ததாகவும், 1 கோடி கன அடி இருப்பதாக மதிப்பிடப்படுகிறதென்றும் அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடி இலாகாவுக்கு உதவ ஜப்பானிய நிபுணர்

கொழும்பு, வெள்ளி

இலங்கை மீன்பிடிதுறையில் பரீட்சைகள் நடத்தி மீன்பிடி இலாகாவுக்கு வேண்டிய ஆலோசனை கூறுவதற்காக ஜப்பானிய நிபுணர் டாக்டர் சி. ஹமுரோ நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

ஜப்பான் அரசாங்க அவசர உதவித்திட்டத்தின்கீழ் இலங்கை மீன்பிடி இலாகாவுக்குஉதவிபுரியும்பொருட்டு நியமனம் பெற்றுள்ள டாக்டர் ஹமுரோ இங்கு ஒரு வருடகாலம் இருந்து கரையோரப் பகுதிகளில் மீன்பிடி ஆராய்ச்சிகள் நடத்துவார். அவர் நடத்திவரும் ஆராய்ச்சிகள் இலங்கை மீன்பிடித் தொழிலுக்குப் பெரும் உதவியாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## சாகித்திய தினம்

கொழும்பு, வெள்ளி

இம்முறை சாகித்திய தின கொண்டாட்டங்கள் பதுளை நகரில் நடைபெறவிருக்கின்றன.

சாகித்திய தினத்தையொட்டி நடைபெறவிருக்கும் கருத்தரங்கொன்றில் நாட்டில் உள்ள பல அறிஞர்கள் கலந்துகொள்ள இருக்கிறார்கள். பிரதம சொற்பொழிவாளராக டாக்டர் செனரத்பரணவித்தான கலந்துகொள்வார்.

## கைத்தொழில்மான்யம் குறைக்கப்பட்டது

பம்பலப்பிட்டி வெள்ளி

கைத்தொழில் மீன்பிடி அபிவிருத்திக்கென முன்னர் ஒதுக்கப்பட்ட மான்யத்திலிருந்து 480 லட்சம் ரூபா குறைக்கப்பட்டுள்ளது. முன்னர் 2380 லட்ச ரூபா கைதடுதொழில் மீன்பிடி அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்தது இப்பொழுது இத்திட்டங்களுக்கு 1900 லட்சம் ரூபா மட்டும் செலவுசெய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மிகுதி 480 லட்சம் ரூபாவும் விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவிடப்படும்.

## கொஸிஜின் வரவேற்பு

கெய்ரோ, மே 20

இந்தியா, யூகோஸ்லேவியா, ஐக்கிய அராபியக் குடியரசு ஆகிய நாடுகளைக் கொண்ட மண்டல சார்பற்ற மகாநாடு நடத்தப்படுவதை ரஷ்யப் பிரதமர் கொஸிஜின் வரவேற்றிருக்கிறார்.


நியூ சாலிங்கன்
(இணுவில்)
தினசரி
3-30, 6-30, 9-30
WILD HARVEST

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி2-30, 6-30, 9-45க்கு
N.D.ராமராவ்K A.தங்கவேலு
நடித்த
மேதாவிகள்

REGAL--JAFFNA
NOW SHOWING!
Charles Bronson - Susan Oliver
in
GUNS OF DIABLO
(M.G.M's
Thrilling action Film)

கடைசி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

24-ந் திகதி முதல்
கிங்ஸ்லி பிளாஸா நவா
வெலிங்டன் விஜயா
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த


# "தமிழ்க் கலைச் சொல்லாக்கம் பற்றி முடிவுசெய்யநேரம் இருக்கவில்லை"

## மலேஸிய தமிழாராய்ச்சி மகாநாடு பற்றி வித்துவான் பொன். முத்துக்குமாரன்

யாழ்ப்பாணம், சனி

மலேஸியாவிலுள்ள மறத்தமிழர்கள் பரம்பரை இதே போக்கில் போய்க்கொண்டிருந்தால் இன்னும் பத்தாண்டுக்காலத்திற்குள் அங்கு இனிமை மிக்க தமிழ்மொழி அடிச்சுவடே தெரியாமல் அழிந்து போய்விடுமென்று வித்துவான் பொன். முத்துக்குமாரன் கூறினார்.

இலங்கைக் கம்பன் கழகத்தினரால் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் மலேஸியா தமிழ் மகாநாட்டில் கலந்துகொண்ட நீதியரசர் திரு. ஏச். டபிள்யு. தம்பையாவுக்கும், வித்துவான் பொன். முத்துக்குமாரனுக்கும் தேநீர்விருந்தொன்று அளிக்கப்பட்டது. அப்பொழுது வித்துவான் பொன். முத்துக்குமாரன் பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

### மலேஸியாவில் தமிழ் சாகிறது!

மலேஸியாவிலுள்ள நம்மவர்கள் எப்படியிருக்கிறார்களென ஊன்றிக் கவனித்தேன். மலேஸியாவில் நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு பற்றி உலகமே கருத்துடன் கவனித்து கொண்டிருந்தபோது அங்குள்ள தமிழர்கள் மகாநாடுபற்றி ஒருசிறிதளவாவது சிந்தியாது, அதுபற்றி நினைப்பில்லாமல் இருந்தது அங்குள்ள தமிழர் எப்படித் தமிழை வளர்க்கிறார்கள், தமிழின்மீது எவ்வளவு பற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியக்கூடியதாக இருந்தது. இன்னுமொருவேதனை தரும் நிகழ்ச்சியையும் கவனித்தேன். அங்குள்ள இரு தமிழர்கள் பேசும்போது ஆங்கிலத்திலேயே பேசிக்கொள்கிறார்கள். ஆங்கிலத்தில் பேசாவிட்டால் மாலாய்மொழியிலோ, சீனமொழியிலோ பேசிக்கொள்கிறார்கள். இப்படியாக நிலைமை அங்கு போய்க் கொண்டிருந்தால் இன்னும் பத்தாண்டுகளில் மலேஸியாவில் தமிழ் செத்தொழிந்துவிடும்.

### தமிழ் உலகமொழி

தமிழ்மொழி உலகமொழியாகிவிட்ட சம்பவம் கோலாலம்பூரில் உலகறிய நடந்தது. தமிழ்மொழியை வளர்க்கத் தமிழர்கள் பின்னின்றுகொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில், பிறமொழி பேசும் வெளிநாட்டவர்கள் தமிழை வளர்க்க தமிழ் உலக அரங்கிலே செழிப்புற்று வளர எப்படியெல்லாம் முயற்சிசெய்து வருகிறார்களென்ற அதிசயத்தை அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டு அரங்கிலே பார்வையாளர் சபையிலே காணக்கூடியதாக இருந்தது. மாற்று மொழி பேசும் மலேஸியா நாட்டு பிரதமமந்திரி துங்கு ரஹ்மான் தமிழிலே முழங்கியதையும், வேற்றுமொழி பேசும் வெளிநாட்டவர்கள் செந்தமிழிலே பேசியதையும், தமிழின் சிறப்புக்கள் பற்றிப் பலநாட்டு அறிஞர்கள் உரைநிகழ்த்தியதையும் மலேஸியா மகாநாட்டில் பார்க்கக்கூடியதாக இருந்தது.

[illegible]

பெருமை பேசுவது அவனுடன் கூடப்பிறந்த சொத்தாகிவிட்டது. ஆனால் இதை உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு மட்டும் விதிவிலக்காக்கிக் கொண்டிருக்கலாம். உலகத்திலுள்ள பல நாட்டு அறிஞர்களும் சேர்ந்து நடாத்தும் ஒரு மகாநாட்டில் பழம்பெருமை பேசிக்கொள்வதற்குக் காலத்தை ஒதுக்கியிருக்கவேண்டியதில்லை. தமிழ்மொழி தலைநிமிர்ந்து உலக அரங்கிலே முன்னிற்பதற்கு என்ன செய்யவேண்டும், அதற்கான வழிவகைகள் என்னென்ன என்பது பற்றி எல்லாம் ஆராய்ந்திருக்கலாம்.

### கருத்தரங்கில் பல குறைகள்

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் இடம்பெற்ற கருத்தரங்கில் பல குறைபாடுகள் காணப்பட்டன. கருத்தரங்கில் 200 அல்லது 250 பேர் மட்டுந்தான் கலந்துகொண்டனர். அவர்கள் ஆராய்ச்சிக்கட்டுரை சமர்ப்பித்தவர்களும், பார்வையாளர்களுமாவர். மகாநாட்டைச் சிறப்புற நடாத்தப் பணத்தை அள்ளியள்ளிக்கொடுத் தமிழ்ச்சங்கங்களும், தமிழ்ப் பெரியார்களும், பொதுமக்களும் அந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. எப்படித்தான் கற்றவர்கள் சேர்ந்து ஆராய்ச்சிகள் பலவற்றை நடாத்தினாலும், பொதுமக்களுடைய இணைப்பில்லாமல் நடாத்தப்படும் ஆராய்ச்சிகள் அர்த்தமற்றவைகள் என்றே சொலல்லாம். இந்த வகையில் கருத்தரங்கு நிறைவுபெறவில்லை. இன்னும் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்தன. ஆனால் குறையில் நிறைவு காண்பதுதான் பெருமையைத் தரும்.

மகாநாட்டில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியவர்களுக்கு போதியளவு நேரம்கொடுக்கப்படவில்லை. பத்து நிமிடங்களுக்குமேல் ஒருவர் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அப்படி மீறிப் பேசினால் சிவப்பு விளக்கொன்று எச்சரிக்கை செய்யும். அதையும் மீறினால், சைகைகாட்டப்படும். இந்தப்பத்து நிமிடங்களுக்குள் எதைப்பற்றிப்பேசலாம்? பழமை பற்றியோ தமிழின் தற்கால நிலைமை பற்றியோ முழுமையாக ஒன்றுமே பேசமுடியாமல் போய்விட்டது. அடுத்து சென்னையில் நடாத்தப்படும் மகாநாட்டுக்கு இம்மகாநாட்டுக்குறைபாடுகள் ஒரு முன்னறிவித்தலாக இருக்க வேண்டும்.

### கலைச்சொற்கள் பிரச்னை

நாட்டுக்குநாடுவேறுபடும் தமிழ்க் கலைச்சொற்கள் ஒருமைப்பாடாக இருப்பதற்கான ஒரு முயற்சியை தமிழாராய்ச்சிமகாநாட்டில் விவாதித்து முடிவு கண்டிருக்கலாம். ஆனால் நேரம் காணாததால் இதுபற்றி ஆராய முடியாமல்போய் விட்டது.

### சிறப்புப் பெற்றோம்

மலேசியா தமிழ் மகாநாட்டில் கலந்து கொள்ளதற்காக இங்கிருந்துசென்ற நாம் அங்கு சிறப்புப் பெற்றோம். வேற்றுநாட்டு அறிஞர்கள் நம்மை தக்கமரியாதையுடன் வரவேற்றார்கள். அறிஞர்கள் வரிசையில் அறிஞர்களாக அமர்த்தப்பட்டோம். இவைகளைவிட, மகாநாட்டில் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து உபதலைவர்களில் ஒருவராக நம்மவர் தெரிவுசெய்யப்பட்டார். நீதியரசர் தம்பையா அவர்களே இந்த உபதலைவர்களில் ஒருவராவர்.

## மலையக கல்விச்சபை மந்திரிக்கு மகஜர்

கொஸ்லாந்தை, வெள்ளி

"மலையகத்தில் நிலவும் பாடசாலை இடநெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு தனிப்பட்ட முறையில்பாடசாலை நடத்த சமூக சேவை மன்றங்களையும் பொது நலஸ்தாபனங்களையும் தனிப்பட்டவர்களையும் அனுமதிக்கவேண்டும். அத்தோடு அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்யவேண்டும். இதனால் அரசாங்கத்திற்கு வீணாக ஏற்படும் சிரமங்கள்தவிர்க்கப்படும்" என மலையக எம். பிக்கள், செனட்டர்கள் மூலமாக பிரதம மந்திரி, ராஜாங்க மந்திரி, கல்வி மந்திரி ஆகியோருக்கு அனுப்பப்பட்ட மகஜரொன்றில் மலையகக் கல்விச்சபை யோசனை தெரிவித்துள்ளது.

தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் தேசிய மயமாக்கமுன்வந்துள்ளதையும் அங்கு தமிழே போதனா மொழியாக்க முடிவுசெய்திருப்பதையும் சபை பாராட்டி இப்பாடசாலைகளில்தற்போதுள்ள ஊழல்களையும், கல்வி மந்த நிலையையும்நீக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கேட்டுள்ளது.


மறந்து விடாதீர்கள்!
எங்களிடம் பல வர்ணப்பாடமைந்த
படுக்கை விரிப்புகளும்
தலையணை மேல்உறைகளும்
மற்றும்
சகல துணிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
ரொலறம்ஸ்
46, பெரிய தெரு, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மேற்கிந்தியகிரிக்கெட் கோஷ்டியின் இந்திய சுற்றுவிஜயம்

## மூன்று கிரிக்கெட் டெஸ்டுகளில் (5 நாள்) கலந்து கொள்வார்கள்

சென்னை, மே. 20

இவ்வருட இறுதியில், மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டியொன்று இந்தியாவில் சுற்றுவிஜயஞ் செய்யவிருக்கிறது. அநேகமாக டிசம்பர்மாத முற்பகுதியில் இக்கிரிக்கெட் கோஷ்டியினர் புதுடில்லி வந்து சேர்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுபற்றி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் காரியதரிசி திரு. ஆர். ஸ்ரீராமன் தெரிவிக்கையில், மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டி, இந்தியாவில் மூன்றிடங்களில் ''டெஸ்ட்'' போட்டிகளில் கலந்துகொள்ளுமென்றும் இதுதவிர வேறு அனுசாதாரண போட்டிகளும் நடைபெறுமென்றும் கூறினர்.

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டியினர் இந்தியாவுக்கு டிசம்பர்மாதம் 9-ந் திகதி வருவார்களென்றும் அவர்கள் ஜனவரி 17-ந் திகதி தாயகம் திரும்புவார்கள் என்றும் கூறப்படுகிறது,

'கிரிக்கெட் டெஸ்ட்''டுகள் பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் நடைபெறும். ஒவ்வொரு டெஸ்டும் ஐந்துநாள்வரை நடைபெறும்.

# யாழ். ஹாக்கி கோஷ்டி சென்னையில் விளையாடும்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் ஹாக்கி விளையாட்டுச் சங்கத்தின் கோஷ்டியொன்று, ஆகஸ்ட் மாதத்தில் தென்னிந்தியாவுக்கு சுற்றுவிஜயம் செய்யவிருக்கிறது.

இக் கோஷ்டியினர் சென்னையிலும் 'வேறு சில இடங்களிலும்' நடைபெறும் ஹாக்கிப் போட்டிகளில் கலந்துகொள்வார்கள்.

தென்னிந்தியாவுக்கு அனுப்பப்படவிருக்கும் ஹாக்கிகோஷ்டி அநேகமாக ஜுலை மாதத்தில் தெரிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது அடுத்த சில நாட்களில் ஆரம்பமாகவிருக்கும் கழகங்களுக்கிடையேயான சுற்றுப்போட்டியில் உத்தேச கோஷ்டி தெரிவுசெய்யப்படும். ஹாக்கி விளையாட்டில் போதிய அனுபவமும் ஆர்வமுமுள்ள இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புக் கிடைக்கும் என நம்பப்படுகிறது.

# வேள்விப்பலிக்குப் பின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆள் பலி!

மாவிட்டபுரம், வெள்ளி

மூளாய் குமரன் புலத்தைச் சேர்ந்த சுப்பர் முருகேசு என்பவர் நேற்று முன்தினமிரவு துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மரணமானது சம்பந்தமாக மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ் எச். அத்துப்பான நேற்று ஸ்தலத்தில் மரண விசாரணை நடத்தினர்.

காங்கேசன்துறைப் பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டரும் பதில் உதவிப்பொலிஸ் சுப்பிரிண்டனுமான திரு. எஸ். வி. மூர்த்தி சங்கானை சப் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. இராசையாவின் உதவியுடன் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

மரண விசாரணையின் போது, காலம் சென்ற சுப்பர் முருகேசு புதன்கிழமை சுழிபுரத்திலுள்ள ஒரு கோவிலில் நடைபெற்ற வேள்விக்கு ஒரு கிடாய் கொண்டுசென்று வெட்டிவிற்றுவிட்டு இறைச்சி வாங்கிக்கொண்டு வீடு திரும்பியதாகவும்அதேபோல அவரது மூத்தசகோதரரான சுப்பர் கணபதியும் அவ்வேள்விக்குச் சென்று இறைச்சி வாங்கி வந்ததாகவும் இருவரும் தங்களது வீடுவந்து சேர்ந்த பின்னர் கணபதி மதுபானம் வாங்கி வீட்டில் வைத்துக்குடித்துக்கொண்டிருந்தபொழுது சுப்பர் முருகேசுவும் அங்கு வந்து, கணபதியின் மகனிடம் அரைப்போத்தல் கள்ளு வாங்கிக் கொடுத்ததாகவும் அப்பொழுது வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வாக்குவாதத்தின்போது கணபதி ஒரு துப்பாக்கியைக் கொண்டுவந்து ஆகாயத்தை நோக்கிச் சுட்டபின்னர், ''இப்படியாகத்தான்உன்னையும் சுடுவேன்'' என்று சுப்பர் முருகேசுவிடம் கூறியதாகவும் இக்கட்டத்தில் மற்றொரு சகோதரரான கந்தசாமி இருவரையும் சமாதானப்படுத்தி சுப்பர் முருகேசுவை வீட்டுக்கு அனுப்பிவைத்ததாகவும் சுப்பர் முருகேசு தமதுவீட்டில் பாடிக்கொண்டிருந்த பொழுது கணபதி தமது மகன் தெய்வேந்திரத்துடன் சுப்பர் முருகேசு வீட்டு வளவுக்குள் வந்து வளவு வேலியை அழித்த பின்னர், ''வா வெளியே, உன்னைச் சுடவந்திருக்கிறேன்'' என்று முருகேசுவை நோக்கி அழைத்ததாகவும் சுப்பர் முருகேசு ''சுடு பார்ப்போம்'' என்று கூறி வெளியே வந்ததும் கணபதி அவரைச் சுட்டதாகவும், சுப்பர் முருகேசு ஸ்தலத்திலேயே விழுந்து மரணமானதாகவும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

சாட்சியங்களைப் பதிவு செய்த நீதிபதி, பிரேத பரிசோதனை நடத்துமாறு யாழ்ப்பாணம் மாவட்ட சட்டவைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டு இக்கொலை சம்பந்தமாக பொலிசாரால் தேடப்பட்டுவரும் சுப்பர் கணபதி அவரது மகன் 'தாராசிங்' என்று அழைக்கப்படும் தெய்வேந்திரன் ஆகியோரைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பித்து மேல் விசாரணையை இம்மாதம் 23-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# சமூக முன்னேற்ற மகாநாடு

பூநகரி, வெள்ளி

சமூக முன்னேற்ற கருத்தரங்கு மகாநாடு பூநகரியில் காரியாதிகாரி திரு ஏ. கந்தையாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது இக்கருத்தரங்கு 3 நாட்கள் நடைபெற்றது.

விவசாய அபிவிருத்தி ஆணையாளர், குடிசைக் கைத்தொழில் இலாகா உத்தியோகத்தர், விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர், ஐக்கிய சமாஜ உத்தியோகத்தர், தேசிய சேமிப்பு உத்தியோகத்தர், மற்றும் பல உள்நாட்டு இலாகா உத்தியோகத்தர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள்.

கிராம அபிவிருத்தி சங்கங்கள், கிராம முன்னேற்ற சங்கங்களிலிருந்து தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

2-ம் நாள் கருத்தரங்கிற்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமைதாங்கி கருத்துரை நிகழ்த்தினர். அப்பொழுது, சங்குப்பிட்டி கேரதீவு பாலத்தை இரண்டு வருட காலத்தில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பேன் என வாக்குறுதியளித்தார்.

பூநகரி பகுதியில் பஸ் சேவையை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி எடுப்பதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அங்குள்ள வயல்களில் செயற்கை பசளையிடுவதன் மூலம் வயல்கள் பழுதடைந்து விடும் என்று நிலவிய கருத்து, மறுக்கப்பட்டது.

இரணைதீவுமட்டுவில்நாடு, தப்பிராய், வேரவில் ஆகிய இடங்களில், நெசவு நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்று காரியாதிகாரி திரு. கந்தையா வற்புறுத்தி பேசினர்.

நல்லூர், செட்டிய குறிச்சி போன்ற இடங்களுக்கும் நெசவு நிலையங்கள் தனிப்பட இயங்குவது நன்மை பயக்கும் என்று கூறப்பட்டது.

## உங்களுக்கு.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 13 D 0322 | 02 O 0396 |
| 02 U 0587 | 07 S 0017 |
| 10 F 0775 | 11 D 0472 |
| 10 W 0684 | 03 C 0589 |
| 07 U 0063 | 10 J 0502 |
| 13 U 0587 | 05 W 0947 |
| 10 J 0410 | 05 B 0813 |
| 06 Q 0786 | 04 J 0203 |
| 05 P 0819 | 06 O 0863 |
| 11 B 0904 | 08 O 0482 |
| 12 K 0300 | 13 Q 0825 |
| 04 R 0176 | 11 T 0991 |
| 02 B 0630 | 08 B 0932 |
| 12 E 0600 | 12 R 0129 |
| 07 W 0080 | 02 Q 0506 |
| 08 A 0637 | 11 R 0841 |
| 05 E 0621 | 01 N 0750 |
| 03 F 0115 | 13 G 0390 |
| 10 S 0420 | 11 P 0988 |
| 01 Z 0554 | 06 K 0510 |
| 05 C 0265 | 05 M 0987 |
| 12 U 0151 | 07 O 0879 |
| 04 A 0885 | 12 N 0712 |
| 11 P 0970 | 11 U 0178 |
| 11 K 0627 | 02 O 0187 |
| 12 W 0813 | 04 P 0293 |
| 03 K 0243 | 02 E 0354 |
| 05 G 0741 | 09 H 0606 |
| 05 C 0624 | 03 K 0761 |
| 05 P 0219 | 09 D 0378 |
| 07 F 0800 | 03 N 0608 |
| 08 U 0344 | 12 K 0405 |
| 05 T 0659 | 07 C 0803 |
| 12 K 0219 | 09 Y 0875 |
| 06 V 0227 | 11 S 0668 |
| 10 K 0316 | 10 L 0675 |
| 05 Q 0965 | 05 B 0745 |
| 01 R 0020 | 12 S 0065 |
| 13 Y 0451 | 08 N 0357 |
| 05 Y 0352 | 12 O 0972 |
| 05 X 0470 | 01 H 0344 |
| 02 X 0198 | 08 L 0932 |
| 07 A 0711 | 08 R 0473 |
| 10 M 0801 | 02 U 0499 |
| 03 V 0566 | 03 R 0390 |
| 11 K 0178 | 08 B 0009 |

# தபால்பைகள் இருந்த இடம்!

யாழ்ப்பாணம், சனி

சுண்டிக்குளியில் நடந்து கொண்டிருந்த நாடக மேடையொன்றில் விரிக்கப்பட்டநிலையில் 81 தபால் பைகளை பொலிஸின் உதவியுடன் தபால் தந்திப் பகுதியினர் கைப்பற்றினர்.

தபால் பகுதிக்குக் கிடைத்த இரகசியத் தகவலைக் கொண்டு, தபால், தந்தி இன்ஸ்பெக்டர்கள் ஆர். சண்முகலிங்கம், பி. அரியரத்தினம் ஆகியோர் கரையூர்பொலிஸ் இன்ஸ்பெக்டர் துரைசிங்கத்தின் உதவியுடன் சென்று சோதனையிட்டபோதே இவைகள் பிடிபட்டன.

அதே தினத்தில் கரையூரிலுள்ள ஒரு வீட்டில் 62 தபால் பைகளை இவர்கள் கைப்பற்றினர்.

சந்தேகத்தின்மீது இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக மேலும் விசாரணைகள்நடைபெறுகின்றன. (ந. நி.)

# ''சேவை தான் ஆசிரியர் கடமை'

வவனியா, வெள்ளி

''ஆசிரியர்கள் சமுதாயத்தை உருவாக்கும் சிற்பிகள் பல மாறுதல்கள் ஏற்படவிருக்கும் கல்வித் திட்டத்தால் ஆசிரியர்கள் மிகவும் பாதிக்கப்படவிருக்கிறார்கள். எத்தகைய மாற்றங்களுக்கும் தம்மை அர்ப்பணித்து சேவை மனப்பான்மையுடன் பணி புரிவதே ஆசிரியர் கடமை.

முரசுமோட்டையில் வண ஏ. சி. தம்பிராசா தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து உரையாற்றிய நாகேசுவர வித்தியாசாலை அதிபர் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினர்.

தலைமையாரியர் ஏ. கே. இராஜேந்திரம், பரந்தன் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. க. இராமச்சந்திரன், திரு. ஏஸ். செல்வரத்தினம் உட்படப் பலர் உரையாற்றினர்.

# மந்திரியின் திட்டத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு, வெள்ளி

'கல்வித்துறையில் தற்பொழுது கல்வி மந்திரியினல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட இருக்கும் கல்வி சீர்திருத்தங்கள் ஜனநாயகத்திற்கு முற்றும் முரணனது அத்துடன் ஜனநாயக கொள்கையையே இந்நாட்டிலிருந்து அடியோடு அக்றிவிடும்' என்று வண. பத்தேகம விமலவன்சதேரோ புதிய நகரசபை மண்டபத்தில் உத்தேசிக்கப்பட்ட கல்வித்திட்ட மாற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

# பொலிஸ் பாதுகாப்பில் தொழிற்சங்கவாதிகள்

திருகோணமலை, வெள்ளி

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் திருக்கோணமலைக் கிளைச்சங்கத்தின் உபதலைவர் திரு. கே. திருச்செல்வமும் இலங்கை வர்த்தகசங்க திருமலைக் கிளைக் காரியதரிசி திரு. எஸ். துரைரத்தினமும் பொலிசார் பாதுகாப்பில் வைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர் திருக்கோணமலை கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின்போதுயன்னல் கண்ணடிகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். இம்மாதம் 22-ந் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு இவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.


# வரிவிளம்பரம்

## தேவை

வேலையாட்கள்

மசகிடும் சேவையில் (சேர்விஸ் ஸ்ரேசனில் வேலை செய்து) அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. நேர்முகமாகச் சமுகமளிக்கவும். லிங்கோ லுப்பிறிக்கேசன் சேர்விஸ், பலாலி வீதி, கோண்டாவில். 369

கடைப்பொறுப்பாளர்

ஆங்கிலம் பேசக்கூடிய பிணைப்பணம் செலுத்தக்கூடிய கடைப்பொறுப்பாளர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். ராணி மருந்துச்சாலை 230, பிரதான வீதி, சுன்னுகம். (374)

ஆசிரியர்கள்

கணக்குப் பதிவியல், வர்த்தக ஆசிரியர்கள் உடனடியான சேவைக்குத் தேவை. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 362

## விற்பனைக்கு

கார்

நல்ல நிலைமையிலுள்ள EY பின்பகுதி செவனெற் டீலக்ஸ் மொடல் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். கே. வேலும்மயிலும், டிஸ்பென்சரி ரோட், வல்வெட்டித்துறை. 327

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## கல்வி

மோட்டார் இயந்திர சாஸ்திரம்

மோட்டார் இயந்திரங்களைப் பற்றி மிகவும் நுணுக்கமாகப் பாடங்கள் இலவசமாகச் சொல்லிக்கொடுக்கப்படும். வகுப்புகள் ஆரம்பம் ஜூன் முதலாம் திகதி. விபரங்களுக்கு: மோட்டார் விளையட்டுக்கழகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 370

கலை/விஞ்ஞானம் ஆகியவற்றிற்கு அனுபவமுள்ள பட்டதாரிகளாலும் 3 மாத, 6 மாத, 1 வருட தமிழ்/ஆங்கிலச் சுருக்கெழுத்துக்கும் மற்றும் வர்த்தகப் பாடங்களுக்கும் 44 வருட ஆசிரிய அனுபவமுள்ளவராலும், சிங்களத்துக்கும்/ தையலுக்கும் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. விண்ணபபிக்கவும். வர்த்தகக் கல்லூரி, ஸ்தாபிதம் 1924, ப த்தித்துறை. (372)

கலை/விஞ்ஞானம்/வர்த்தகம் (தமிழ்/ஆங்கில) தையல்/சிங்களம் ஆகியவற்றிற்கு காலையிலும், பாடசாலை செல்லும் மாணவ/மாணவிகட்கு மாலையிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. 6-ம், 7-ம், 8-ம் வகுப்பு மாணவர்களுக்கும் மாலை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, வதிரி, கரவெட்டி. (373)


# உ. பி.யில் சீனர்கள்

புதுடில்லி, மே 20

சென்றவாரம் உத்தர பிரதேசத்தில் 2 சீனத் துருப்புக்களை ரோந்து கோஷ்டியினர் கண்டதாகவும், பின் அவர்கள் திரும்பிச்சென்றுவிட்டார்கள் என்றும் கூறப்படுகிறன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தியேட்டர் கைகலப்பு

# சந்தேகநபர்கள் நால்வரும்விடுதலை

யாழ்ப்பாணம், சனி
காங்கேசன்துறையிலுள்ள ஒரு தியேட்டரில் படம் பார்க்கச் சென்ற சிலருக்கும் தியேட்டர் ஊழியர்கள் சிலருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதாக பொலிஸாரினால் கைதுசெய்யப்பப்பட்ட நால்வரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்,

இத் தியேட்டரில் படம் பார்க்கச்சென்ற மல்லாகம் குழவங்காலையைச் சேர்ந்த வேலவி பத்மநாதன் என்பவருக்கு தலையில் பலத்த காயம் விளைவித்ததாகவும் வேறு சிலருக்கு சிறுகாயம் ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்ட புகாரைத் தொடர்ந்து தியேட்டர் ஊழியர்களான ராசு கமலநாதன், பாலசிங்கம் பழனிப்பிள்ளை, மூத்தர் கந்தசாமி, கெஜபதி பாலசுப்பிரமணியம் ஆகிய நால்வரையும் சந்தேகத்தின்மீது காங்கேசன்துறைபொலிசார் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்திருந்தனர்.

நேற்று மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எப். எச். அத்துறுபான முன்னிலையில் சந்தேகநபர்கள் மீண்டும் ஆஜர் செய்யப்பட்ட பொழுது, முன்னர் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில், சந்தேகநபர்களை வழக்காளி அடையாளம் காட்டத் தவறியதால் தாம் விடுதலை செய்வதாக நீதிபதி தீர்ப்பளித்தார். எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் அ. குமரகுரு ஆஜரானார். (ந.நி.)

# தேர்தல் நீதிபதி மீது நோட்டீஸ் பிறப்பிப்பு

கொழும்பு, வெள்ளி
தேர்தல் நீதிபதி பி. ஸ்ரீஸ்கந்தராஜா, நிர்வாக ஊழல்கள் சம்பந்தமாக தம்மீது விதித்திருந்த உத்தரவை ரத்துச்செய்யுமாறு கோரி பலாங்கொடை கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் மனேஜர் திரு. எஸ். கே. டி. தர்மபிரியா தாக்கல் செய்திருந்த மனு நீதிபதி அபயசுந்தரவினாலும், நீதிபதி மாணிக்கவாசகரினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. எஸ். கே. டி. தர்மபிரியாவின் மனுவை ஏற்றுக்கொண்டுள்ள இரு நீதிபதிகளும், தேர்தல் நீதிபதி திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா மீது இன்று காலை ''நோட்டீஸ்'' பிறப்பித்தனர்.

பலாங்கொடை தேர்தல் ஆட்சேபனை வழக்கு விசாரணையின்போது தேர்தல் நீதிபதியாகவிருந்த நீதிபதி திரு. ஸ்ரீஸ்கந்தராஜா, திரு. எஸ். கே. டி. தர்மபிரியா மீது நிர்வாக ஊழல்கள் சம்பந்தமாக கவர்னர்ஜெனரலுக்கு அறிவித்திருந்தார். இதனை எதிர்த்து திரு. தர்மபிரியா தாக்கல்செய்திருந்த மனுவே இப்போது இரு நீதிபதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

# நாவற்காடு கொலை வழக்கில் எதிரிக்கு எட்டு வருட கடூழியம்!

யாழ்ப்பாணம், சனி
நாவற்காடு கொலைவழக்கில் எதிரிக்கு 8 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தீர்ப்பு அளிக்கும்போது இவ்வழக்கில் ஆகக்குறைந்த தண்டனை இதுதானென்று நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. சி. தெரிவித்தார்.

இவ்வழக்கில் 1964ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ந் தேதி நாவற்காடு என்னுமிடத்தில் கந்தையா சபாபதிப்பிள்ளை என்பவர் கனவதியார் இராசையாவைக் கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வக்கேட் திரு. ஜே. ஏ. பி. செரிபம், அட்வக்கேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதனின் உதவியுடனும் திருவாளர்கள் பி. ரி. ஜி. பிரிட்டோ, வி. செல்லத்துரை ஆகியோரின் அனுசரிணையுடன் ஆஜரானார்.

வழக்குத் தொடுநர் தரப்பில் அசைஸ்நீதிமன்றத்தில் நாவற்காடு கொலைவழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் வழக்கறிஞரின் ஆலோசனைப்படி கைமோசக் கொலைக்குற்றத்திற்கு குற்றவாளியென எதிரி ஒத்துக்கொண்டார்.

சடுதியாய் ஏற்பட்ட சண்டையின் நிமித்தம் கைமோசக்கொலைக் குற்றவாளி என்பதை எதிரி ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து ஜூரி சபையினர் தனிமையில் மந்திராலோசனை செய்தனர். இதன்பின் அதனை ஏற்றுக்கொள்வதாகக் கூறினர்.

எதிரிக்கு சார்பில் ஆஜரான அட்வக்கேட் திரு. ஜே. ஏ. பி. செரிபம், எதிரிக்கு 25வயதென்றும் அவர் இன்னும் திருமணம்செய்யவில்லையென்றும், இறந்தவருக்கும் இவருக்குமிடையில் கோபதாபம் இருக்கவில்லையென்றும் நீதியரசரிடம் தெரிவித்தார்.

தீர்ப்பளிக்கும்போது நீதியரசர் கூறியதாவது: உமது வழக்கறிஞரின் புத்திமதிப்படி நடந்துகொண்டு கைமோசக்கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டால் நீர் ஒரு அதிர்ஷ்டசாலி. உமது வழக்கறிஞரின் ஆலோசனைப்படி நடந்துகொண்டதால் குறைந்தளவு தீர்ப்பைப் பெற்றிருக்கிறீர். அல்லது மரணதண்டனை விதிக்கக் கூடிய குற்றத்திற்கு ஆளாகியிருப்பீர்.

இந்த வழக்கு சம்பவத்தில் கண்டகோடரி பாவித்திருக்கிறீர். இது சண்டித்தனமான வேலை. இறந்தவருக்கும் உமக்குமிடையில் கோபதாபம் இருக்கவில்லை.

அசைஸ் விசாரணை இன்று காலை 9-15 மணிக்கு மீண்டும் நடைபெறும்.

## பளைவரை இரட்டைத்தட்டு பஸ் சேவை

யாழ்ப்பாணம், சனி
இப்பொழுது கொடிகாமம் வரை சேவையில் ஈடுபட்டிருக்கும் இரட்டைத்தட்டு பஸ்சேவை ஜூன் மாதம் முதல்திகதி தொடக்கம் பளைவரை சேவைசெய்யும். யாழ்ப்பாணத்திலிருந்து பளை வரை இரட்டைத்தட்டு பஸ் சேவையை விஸ்தரிக்கவேண்டுமென சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி

## சிவன்கோவில் பூங்காவன திருவிழா

யாழ்ப்பாணம், சனி
திருநெல்வேலி சிவன்கோவில் பூங்காவனத் திருவிழா இன்று சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பிரபல தவில் வித்துவான்களின் மேளக்கச்சேரிகளுடன் கடந்த வருடத்திலும் பார்க்க விசேஷமான சில நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

——

## அவசரகாலநிலைமை இன்று விவாதம்

கொழும்பு, வெள்ளி
மக்கள் பிரதிநிதிகள்சபை நாளை சனிக்கிழமை மீண்டும்கூடும்போது நாட்டில் அவசரகாலநிலை தொடர்ந்து இருப்பது குறித்துவிவாதம் நடத்தும். அவசரகாலநிலைமை தற்போது 5-வது மாதமாக அமுலிலிருந்து வருகின்றது. இந்த விவாதம் கேள்வி நேரத்தின் பின்னர் நடைபெறும்.

## கொலைவழக்கில் எதிரி விடுதலை

மாவிட்டபுரம், வெள்ளி
இளவாலையைச் சேர்ந்த வீரகத்தி கணபதிப்பிள்ளை என்பவர் சென்ற வருடம் அக்டோபர்மாதம் 29-ம் திகதி தனது மனைவியான சங்குபதியைக்கொலைசெய்ததாக சங்கானைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபான வழக்கு விசாரணையின்பின் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிர்தரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர். பொலிஸ்தரப்பில சப் இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸ் ஆஜரானர்

இன்றைய குத்துச்சண்டை

# கூப்பர்வென்றால், நூற்றாண்டில் முதல் பிரிட்டிஷ் சாம்பியன்!

லண்டன் மே 21
**இன்று நடைபெறவிருக்கும் உலக அதிபார குத்துச் சண்டைப் போட்டியில், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சாம்பியன் கூப்பர் வெற்றிபெறுவாரேயானால் இந்த நூற்றாண்டில் அவர் முதலாவது பிரிட்டிஷ் உலக அதிபார சாம்பியனாகஇருப்பார்.**

12 வருடங்கள் குத்துச் சண்டையையே தனது வாழ்க்கையின் தொழிலாகக்கொண்டிருக்கும் கூப்பருக்கு வயது 32. மூன்று ஆண்டுகளுக்கு முன் அவர் கிளேயை தனது இடதுகைக் குத்தினால் வீழ்த்தியபோதிலும், அதன்பின் கிளே விட்ட சரமாரியான குத்துக்களால் கண்கள் சேதமுற்ற நிலையில் தோல்வி அடைந்தார். அப்போது கிளே சாம்பியன் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது கூப்பர் தனது கண்களை கிளேயிடமிருந்து பாதுகாக்கவேண்டியுள்ளது. அதேசமயம் கிளே, கூப்பரின் இடது கைக்குத்துக்களிலிருந்து தன்னைப் பாதுகாக்கவேண்டும்.

கூப்பர் தீவிர பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார், 1963-ம் ஆண்டில் தாம்தோல்வியுற்ற காலத்திற்குப்பின், மிகவும் தகுதியுடனும், முன்புடனும் இருப்பதாக கூப்பர் கருதுகிறார். ஆனால் அதே சமயம் தம்மைவிட வயதில் இளைய பாரமான, அதேசமயம் கடந்த 3 ஆண்டுகளில் இன்னும் அதிக அனுபவம் பெற்ற உலக சாம்பியனைத் தாம் சமாளிக்கவேண்டியிருக்கிறது என்பதையும் கூப்பர் உணர்ந்திருக்கிறார். கிளே ஒரு வேகமான குத்துக்காரருமாவார்.

கிளே நன்றி

தனது சாம்பியன்பட்டத்தைக் காத்துக்கொள்ள இங்கிலாந்துவர உதவியவர்களுக்கும், பிரிட்டிஷ் பிரதமர் வில்சனுக்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும், அமெரிக்க ஜனாதிபதிக்கும் கிளே இன்று நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் நன்றிதெரிவித்துக் கொண்டார்.

கூப்பர் தன்னுடன் போட்டியிட தகுதிபெற்றவர் எனக் குறிப்பிட்ட கிளே, தன்னை வரவேற்ற பிரிட்டிஷ் பொதுமக்கள், பஸ், டாக்ஸி சாரதிகளுக்கும் நன்றி நெரிவித்தார். அரசாங்க அதிகாரிகள், தனது மானேஜர், டண்டி, தனது ஆத்மீக ஆலோசகர் ஹெர்பர்ட் முகம்மது ஆகியோருக்கும் கிளே நன்றி தெரிவித்துக் கொண்டார்.

தனது சாம்பியன்பட்டத்தைக் காத்துக்கொள்ள மீண்டும் அடுத்த இரண்டு மாதங்களில் இங்கிலாந்து வரப்போவதாய் கிளே கூறினார். (பி. டி. வி.)

## தமிழ்ப் பேரறிஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலையிலும் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். ஐம்பத்தைந்து வயதான பண்டிதரவர்களின் ஈமக்கிரியைகள் இன்று காலை நடைபெறவிருக்கிறது.

# விளையாட்டு அரங்கு பெயர் மாற்றத்துக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்கிற்கு ''துரையப்பா விளையாட்டு அரங்கு'' எனப் பெயர் சூட்டுவதென யாழ்ப்பாணம் மாநகரசபை செய்த முடிவு பண்பற்றது, நியாயமற்றது, தேவையற்றது என்று யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்குச் சங்கத்தின் அமைப்பாளர்களில் ஒருவரும் விளையாட்டு அரங்கு உருவாவதற்கு பெரிதும் உழைத்தவரும் யாழ்ப்பாணத்திலுள்ள பல விளையாட்டுச் சங்கங்களில் முக்கிய பதவி வகிப்பவருமான திரு. ஈ. கே. குமரையா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இந்த விளையாட்டு அரங்கு உருவாவதற்கு ஒரு சதம் கூடக் கொடுத்து உதவியளிக்காத யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு, அதன் பெயரை மாற்றுவதற்கு உரிமை இல்லையென்றும் ஒரு தனிப்பட்டவரின் பெயரை அதற்குச்சூட்டுவதானால் விளையாட்டரங்கு உருவாவதற்கு முழுமூச்சுடன் உழைத்த திரு. வான்சாண்டனின் பெயரையோ திரு. ஏ. எஸ். மரியநாயகத்தின் பெயரையோ சூட்டுவதே பொருத்தமென்றும் திரு. குமரையா கூறுகிறார்.

விளையாட்டு அரங்கு அமைப்பதற்கு யாழ்ப்பாண நகர மக்கள் மட்டுமல்ல, யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களனைவரும் நிதியுதவி அளித்தனர். எனவே அது யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கும் விளையாட்டுச் சங்கங்களுக்குமே உண்டு என்றும் அவர்கூறுகிறார்.

——

## சங்காபிஷேகம்

பூநகரி, வெள்ளி
முழங்காவில் பிள்ளையார் கோவில் விசேஷ சங்காபிசேகம் எதிர்வரும் 31-ம் திகதி நடைபெறும்.

## திறப்புக் கோர்வை யாருடையது?

யாழ்ப்பாணம், சனி
கோப்பாய் சந்திக்கு அருகாமையில் திறப்புக் கோர்வையொன்று கண்டெடுக்கப்பட்டு, செல்வன் வி. நடேஸ்வரன் என்பவரால் 'ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

## நன்றி நவிலல்

குளுவாங் (மலாயா) அரசினர் வைத்தியசாலையில், (X-Ray. Asst.) கடமையாற்றிய எனது இளைய சகோதரர் முருகேசு நடராசாவின் அகால மரணச் செய்தியை முன்னிட்டு எங்கள் இல்லத்தில் அனுஷ்டித்த துக்கவைபவத்தில் நேரில் பங்கு பற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். தனிப்பட்ட முறையில் தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

வ. மு. நாகேந்திரமும் பாரியாரும், தங்கோடை, காரைநகர். (377)

# மரண அறிவித்தல்

பண்டிதமணி அருளம்பலவனார் காரைநகர் மெய்கண்டான் பாடசாலையின் அதிபரும் விஜயசுந்தர அம்மாவின் (ஆசிரியை அமெரிக்கன் மிஷன் தமிழ்ப்பாடசாலை, காரைநகர்) அருமைக்கணவரும், சிவகாமிப்பிள்ளையின் மருமகனும், மகேஸ்வரநாதன் (உள்நாட்டு இறைவரி மதிப்பாளர்,) மகேஸ்வரிதேவி (ஆசிரியை விசாகவித்தியாலயம், பம்பலப்பிட்டியா) சிவானந்தநாதன் (பல்கலைக்கழகம், பேராதெனியா) தியாகராஜநாதன் (இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்), கலாதேவி (வேம்படி யாழ்ப்பாணம்), சிவயோகநாதன் (இந்துக்கல்லூரி, காரைநகர்) என்பவர்களின் தந்தையும், தனலஷ்சுமியின் (நீலிப்பந்தனை) மாமனாரும் விஜயதர்மா (உள்ளூராட்சி மன்றம், மட்டக்களப்பு) திருமதி விஜயலஷ்மி நல்லதம்பி (ஆசிரியை இலகடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை) விஜயசிங்கம் (கணக்காளர் சுகாதாரப்பகுதி, கொழும்பு) திருமதி விஜய. சரஸ்வதி வைரமுத்து (ஆசிரியை யாழ்நகர்க்கல்லூரி காரைநகர்) விஜயரத்தினம் (ஆசிரியர் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி) விஜயதேவி பஞ்சாட்சரம் (ஆசிரியை ரேமன் கத்தோலிக்க பாடசாலை கொம்பனித் தெரு) என்பவர்களின் மைத்துனருமாகிய அருளம்பலவனார் 20-5-66-ம் திகதி காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் 21-ம் திகதி காலை 10-00 மணிக்கு சாம்பலோடை காரைநகர்மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். தகவல் தருபவர் அருளம்பலம் மகேஸ்வரன். 37

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதியிலுள்ள இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 21ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org